RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

Asian Research Association

DOI: 10.54392/ijmrd2443

# Children's Thoughts in Aruppukottai Kasi Poems

M. Palani [a,*]

[a] Department of Tamil, Sanghamam College of Arts And Science, Annamangalam-604210, India.

*Corresponding author Email: palanimtamil@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd2443

Received: 19-05-2024; Revised: 30-11-2024; Accepted: 07-12-2024; Published: 20-12-2024

**Abstract:** In the world of poetry, there are innumerable poets who have given good ideas through their creativity. These ideas are imprinted on the minds of the people and they become elevated. Poet A. Kasi's work also occupies a special place in this regard. In it, his children's literary work explains the dreams and realizations of those children who have the future ahead. Poet A. Kasi's poems serve as a crutch to know the inner subconscious mind of thousands of students and motivate them accordingly and progress through their literacy.

**Keywords:** Children's Literary Work, Children's Thoughts, Aruppukottai Kasi, Kasi Poems

**Language:** Tamil

## அருப்புக்கோட்டை அ.காசி கவிதைகளில் சிறார் சிந்தனைகள்

மு. பழனி [அ, *]

[அ] தமிழ்த்துறை, தமிழ்த்துறை, சங்கமம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அண்ணமங்கலம்-604210, இந்தியா

### முன்னுரை

கவிதை உலகில் எண்ணற்ற கவிஞர்கள் தம் படைப்பாற்றல் வழி நல்ல கருத்துகளை தந்துள்ளனர். அக்கருத்துகள் மக்களின் மனதில் பதிந்து அவர்கள் மேன்மை அடைகின்றனர். அவ்வகையில், கவிஞர் அ.காசி அவர்களின் படைப்பும் சிறப்பான இடத்தைப் பெறுகின்றன. அதில், இவருடைய சிறார் இலக்கியப் படைப்பானது, எதிர்காலத்தில் மேல் கொண்டுள்ள அச்சிறார்களின் கனவையும், நனவையும் விளக்குவதாய் அமைந்துள்ளன. பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் அக ஆழ் மனத்தை அறிந்து தெறிந்து அவைகளுக்கேற்ப மாணவர்களை ஊக்குவித்து, அவர்களின் கல்வியறிவின் வாயிலாக முன்னேற கவிஞர் அ.காசி கவிதைகள் ஊன்றுகோலாய் அமைகின்றன. அதனை இக்கட்டுரையில் தெளியக் காண்போம்.

### குழந்தைப் பாடல்களின் தோற்றமும் வளர்ச்சியும்:

புவியினில் தோன்றிய எப்பொருளுக்கும் தோற்றமும் வளர்ச்சியுமுண்டு. சங்க காலத்தின் முன்பேயே குழந்தைப் பாடல்கள் தோன்றியுள்ளன என்பதை அறியமுடிகின்றது. அதன் பிறகு சங்ககாலம் தொட்டு தற்காலம் வரை குழந்தைப் பாடல்கள் பல்கிப்பெருகி பெருநிலை வளர்ச்சியை அடைந்துள்ளன. ஒரு பொருளை ஆய்வு செய்யும் முன்னர் அப்பொருளின் அடிப்படைத் தோற்றத்தையும் அதன் வளர்ச்சியினையும் எண்ணி ஆராய்ந்துப் பார்ப்பது மரபாகும். ஆதலால், இக்கவிஞரின் குழந்தைப் பாடல்களை அடியொற்றி, அதன் தோற்றம் வளர்ச்சிப் பற்றி ஆராய்வது இன்றியமையாக் கடமையாகின்றது.

## ஒழுக்கம்

மனிதர் யாவரும் ஒழுக்கத்துடன் வாழ்வதுதான் மனிதப் பிறவியின் அர்த்தமாகும். மனிதத் தன்மையை இழந்து வாழ்பவர்கள் மனித உருவத்தில் வாழும் நடைப்பிணங்கள் ஆவார்கள். ஒரு மனிதன் எதை இழந்தும் வாழ்ந்திடலாம். ஆனால் ஒழுக்கமிழந்து வாழ்வது வாழ்வின் அர்த்தமில்லை.

இதனை,

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்

உயிரினும் ஓம்பப் படும்" (Thiruvalluvar, 2002)

"ஒழுக்கத்தால் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்

எய்துவர் எய்தாப் பழி" (Thiruvalluvar, 2002)

என்ற குறளடிகளின் வழி ஒழுக்கத்தின் உயர்ந்த மதிப்பினை அறிய முடிகின்றது. இதனை வள்ளுவர் வழிநின்று கவிஞர் அ.காசியும்,

சங்கே முழங்கே என்போம் - ஒழுக்கம்

சாலச் சிறந்த தென்போம்

இங்கித வாழ்வு சிறக்க - ஒழுக்கம்

என்றும் பேணுதல் வேண்டும்

இளமையைக் காப்பது ஒழுக்கம் - உடலை

இனிதே வளர்ப்பது ஒழுக்கம்

உள்ளத்தில் உண்மை ஒளிர - என்றும்

உறுதுணை யாவது ஒழுக்கம்"

அறத்தை வளர்ப்பது ஒழுக்கம் - அறிந்து

ஓம்பிக் காப்போம் நன்றே

பிறப்பால் உறவு ஏற்க - ஒழுக்கம்

பேணிக் காத்தல் வேண்டும்.

உயிர்போல் ஒழுக்கம் காப்போம்; - அதனால்

உயர்வு பெற்று வாழ்வோம்!

பயிரினைக் காக்கும் வேலிபோல் - கற்றோர்

கரிந்து காப்பார் ஒழுக்கம்" (Kasi, 2001)

என்பன போன்ற வரிகளின் மூலம் கவிஞர் அ.காசி அவர்கள் சிறார்களுக்கு, ஒழுக்கத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றார். ஒழுக்கத்தை உயிரைக் காப்பது போன்றும், பயிரைக் காப்பது போன்றும் காத்திடல் வேண்டும். மேலும், இளமையிலேயே ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தல் நன்று என்று உணர்த்துவதை அறியமுடிகின்றது.

## உண்மை, நேர்மை

"உண்மையை நேர்மையை மதிப்போம்! - என்றும்

உயர்ந்தப் பண்புகள் வளர்ப்போம்!

நன்மையை யார்க்கும் செய்வோம்! - என்றும்

நல்வழிச் சென்று உயர்வோம!;"

"நேர்மை வழிகளில் நடந்திடு தம்பி!

நிச்சயம் வாழ்வு மலர்ந்திடும் தம்பி!

தீமை வழிதனை மறந்திடு தம்பி!

தினமும் நல்லதை நினைத்திடு தம்;பி!"

"கூர்மையான அறிவைப் பெற்றிடு!

குவலயம் தன்னில் புகழைப் பெற்றிடு!

நேர்மையான வழிகளில் நடந்திடு!

நித்தம் உண்மை பேசிப் பழகிடு!" (Kasi, 1995)

என்பன போன்ற வரிகளின் மூலம் கவிஞர் அ.காசி அவர்கள் சிறார்களிடையே உண்மை, நேர்மையின் மதிப்பினை வெளிப்படுத்துகின்றார்.

## தன்னம்பிக்கை

"உனக்குள் அளவற்ற ஆற்றலும் அறிவும்

வெல்ல முடியாத சக்தியும் குடிகொண்டிருக்கின்றன

என்று நீ நினைப்பாயானால் அந்த சக்தியை

உன்னால் வெளியே கொண்டு வரமுடியுமானால்

நீயும் என்னைப்போல் ஆக முடியும்" (Swami Vivekanandhar, 1992)

என்ற விவேகானந்தரின் வரிகளுக்கேற்ப கவிஞர் அ.காசியும் சிறார்களுக்கு பல்வகையில் தன் முனைப்புச் சிந்தனைகளைப் பதிவு செய்துள்ளார். அவற்றுள் சில கவிதைகள்,

"துன்பம் வந்தால் துவளாதே!

துணிவே உனக்குத் துணையாகும்

இன்பம் வந்தால் துள்ளாதே!

எளிதாய் வாழக் கற்றுக்கொள1"

"உன்னை நம்பி வாழ்ந்துவிடு!

தளரா மனதைக் கொண்டுவிடு!

விண்ணைத் தொடும்படி வாழ்ந்துவிடு!

வெற்றிகள் கோடி பெற்றுவிடு!"

"உச்சி மீது வானிடிந்து

வீழ்ந்த போதிலும் நிலை குலையா

அச்சம் அகற்றி வாழ்ந்துவிடு!

அழியா நம்பிக்கைப் பெற்றுவிடு!" (Kasi, 1979)

என்பன போன்ற தன்னம்பிக்கைப் பாடலின் மூலமாக சிறார்களுக்கும் தன்னம்பிக்கை விதைகளை விதைத்துள்ளார். துன்பம், துயரம் வரும்போது, சோராதிருக்க வேண்டுமென்கிறார். மேலும் யாரையும் நம்பாமல் தன்னை மட்டுமே நம்பி உழைத்து வாழும் உன்னத தனிமனிதராகச் சிறக்க வேண்டுமென்கிறார். உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லா மனத்தினைப் பெற்றிட வேண்டுமென்று பாரதி கூறுவது போன்று கவிஞர் அ.காசியும் தமது தன்னம்பிக்கைப்

பாடலில் மாணவச் செல்வங்களுக்கு மனத் தைரியத்தை அடையாளம் காட்டுகின்றார். இரும்பு இதயத்தையும், வைரம் பாய்ந்;த தன்னம்பிக்கை நெஞ்சினையும் பெற்றிட வேண்டுமென்று கவிஞர் அறிவுறுத்துகின்றார்.

## விடாமுயற்சி

விடாமுயற்சியின் மகத்துவத்தை வள்ளுவர் கூறுகையில,;

"முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை

இன்மை புகுத்தி விடும்"

"தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்

மெய்வருத்தக் கூலி தரும்"

"வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்

உள்ளத் தனையது உயர்வு"

என்று உணர்த்துகின்றார் (Thiruvalluvar, 2002). வள்ளுவரின் குறளடிகளின் வாயிலாகவும் முயற்சியின் வெற்றிகளை அறியமுடிகின்றன. வள்ளுவரின் குறளடிகளை அடியொற்றி, கவிஞர் அ.காசி அவர்களின் கவிதைகளை நோக்குகையில்,

தளரா வூக்கம் கொண்டவனை - ஆக்கம்

தேடிச்சென்று பயன் கூட்டும்,

அளவிலா வெற்றிகள் தேடிவரும் - என்றும்

அடர்ந்த முயற்சிகள் கொண்டோர் ககு"

"முயற்சி யுடையார் வாழ்வில்

மகிழ்வது வெற்றிக் கோலம்

அயற்சி யுடையார் வாழ்வில்

அடைவதோ வறுமைக் கோலம்"

"இளமை முயற்சிப் பருவம்

எதிலும் வெற்றிகள் சூடும்

வளமைப் பலவும் அடையும்

வாழ்வினில் சிறந்து உயரும்" (Kasi, 2001)

என கவிஞர் சிறார்களுக்கு தொடர் முயற்சியாகிய விடாமுயற்சி வேண்டுமென்று அறிவுறுத்துகிறார்.

## கடின உழைப்பு

கடின உழைப்பின் உயர்வை கவிஞர் கண்ணதாசன் அறிவுறுத்துகையில்,

"ஒவ்வொரு கரமும் உழைத்திட வந்தால்

ஏழ்மை நீங்குமடா

ஒவ்வொரு கல்லும் ஒருபடியேறினால்

கோபுரம் ஆகுமடா

உதவிகள் இல்லாமல் கூட்டுறவாலே

உலகம் வாழுமடா

இன்று குடிசைகள் தோன்றுமடா

நாளை கோபுரம் ஆகுமடா" (Kannadhasan, 1989)

என்று தமது பாடல் வரிகளின் மூலம் உழைத்தால் மண்ணும் பொன்னாகும். குடிசைகளும் கோபுரமாகும் என்று பதிவு செய்கிறார்.

இக்கூற்றினை மெய்ப்பிக்கும் வகையினில் கவிஞர் அ.காசி அவர்கள் தமது சிறார் பாடல்களில் சிறார்கள் அனைவரும் உழைப்பின் இலக்கணத்தை அறிந்து உழைக்க இளம் வயதிலேயே முன்வரவேண்டுமென்று அடைக்கிறார்.

இதனை,

"உழைப்பை போற்றி மதிக்க வேண்டும்

உயர்ந்திட உழைப்பை நாட வேண்டும்

பிழைப்பை உயர்த்திட உழைக்க வேண்டும்

பிறர் உழைப்பில் வாழ்வதை மறக்க வேண்டும்"

"உழைத்திட தொழில்கள் பெருக வேண்டும்

உழைப்புக்குப் போதிய ஊதியம் வேண்டும்

உழைத்தே என்றும் உயர வேண்டும்

உழைப்பால் உயர்ந்து சிறக்க வேண்டும்" (Kasi, 2000)

இப்புவியினில் எந்தவொரு மனிதனும் தன்னுடைய உழைப்பால் மட்டுமே உண்ண வேண்டும், உயர வேண்டுமே தவிர சோம்பேறியாய் இருந்து கொண்டு மறைமுகமாக அடுத்தவர் உழைப்பினில் உண்டு உயர்வது திருட்டுத்தனமாகும் என்று கண்டித்து கவிஞர் அ.காசி அவர்கள் சிறார்களை உழைக்க அழைக்கிறார்.

## சாதி மதக் கொடுமைகள்

"சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்

தாழ்ச்சி உயர்த்திச் சொல்லல் பாவம்" (Bharathiar, 2000)

என்ற வரிகளின் மூலம் பாரதியார் சிறார்களுக்குச் சீர்திருத்த கருத்துகளைப் போதிக்கிறார். மேலும் வள்ளலாரும் சாதிமதமெனும் இக்கொடுமைகளைச் சாடும் போது,

"சாதியும் மதமும் சமயமும் பொய்யென

ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ்சோதி" (Uran Adigal, 1997)

என்ற வரிகளின் மூலம் சாதியும், மதமும், சமயமும் மனிதனால் கண்டு பிடிக்கப்பட்ட மூடபழக்கமென எதிர்க்கின்றார். மண்ணில் தோன்றிய அனைவரும் சமநிறையுடையவர்கள், எவரும் உயர்ந்தவர் தாழ்ந்தவர் அல்லர் என்று கூறி, சமூகத்தை திருத்துவது போன்றும், இவ்விரு கொடுமைகளையும் கவிஞர் அ.காசியவர்களும், தமது மழலைப் பாடல்களின் மூலம் சமூகத்தைத் திருத்துகிறார்.

இதனை,

"நீதிக் கெதிராய் நிற்கின்ற

நேசம் பற்றைச் சிதைக்கின்ற

சாதி சமயப் பிளவுகளால்

சாரும் கேடுகள் கோடியாகும்

"சாதி சமய பேதம் நீக்கி

சமரசமுடனே வாழ்தல் நன்றாம்

ஆதி மூடர் பிரித்த சூழ்ச்சி இதனை

அறிந்து நீயும் திருந்துதல் நன்றாம்" (Kasi, 2000)

என்று சாதி வெறியையும், மதவெறியையும் கவிஞர் கண்டிப்பதோடு, சிறார்களை நோக்கி இவ்விரு தீயக்கொடுமைகளைப் பின்பற்றாதீர்கள் என்று வேண்டுகோள் விடுக்கின்றார்.

## முடிவுரை

அருப்புக்கோட்டைக் கவிஞர் அ.காசி அவர்களின் சிறார் சிந்தனைகளின் வாயிலாக, ஒட்டு மொத்தச் சிறார்களின் எதிர்கால கனவுகளை நனவாக்கவும், நாட்டிற்கும், வீட்டிற்கும், உலகிற்கும், தலைச் சிறந்த சான்றோர்களாக சிறார்கள் விளங்க வேண்டும் என்பதை கவிஞர் எடுத்துக் கொண்ட உண்மையான அக்கறையை அறியமுடிகின்றது. இவ்வாறாக கவிஞர் அவர்கள் சிறார் சிந்தனைகளின் வாயிலாக சிறார்களுக்கு மட்டும் அல்லாமல் இளைஞர், மற்றும் பெற்றோர், ஆசிரியர் ஆகியோருக்கும், இக்கருத்துக்களில் அடங்கியிருக்கும் நற்பண்புகள், மாந்தர்நேயம், உலக ஒற்றுமைகள் போன்ற அனைத்தும் யாவர்க்கும் பொருந்துவனவாய் அமைந்துள்ளது என்பதில் எவ்வித ஐயமில்லை என்பது புலனாகிறது.

## References


Bharathiar, (2000) Bharathiar Kavithaikal, New Century Book House, Chennai, India

Bharathidhasan, (2018) Bharathidhasan Kavithaigal, Aruna Publications, Chennai, India

Kannadhasan, (1989) Thirai Isai Padalkal, Vol 2, Vanathi Pathipagam, Chennai, India

Kasi, A. (1979) Insuvai virunthu irupathu, New Book Stall, Arupukottai, India

Kasi, A. (1995) Kavisuvaiamuthu, New Book Stall, Arupukottai, India

Kasi, A. (2000) Namakuth Tholil Kavithai, Pushumalar Puthaga Alayam, Chennai, India

Kasi, A. (2001) Penmai Potruvom, Ramanathan Pathipagam, Chennai, India

Kasi, A. (2001) Vallalar Valvum Mummanthiramum, Vallalar Raja Arivalayam, Sevveri, India

Swami Vivekanandhar, (1992) Veera Ilainarukku, Sri Ramakrishana Madam, Chennai, India

Thiruvalluvar, (2002) Ulaga Podhumurai Thirukural, Athikesavan Pathipagam, Dharmapurai, India

Uuran Adigal, (1997) Thiruvarutpa, Samarasa Suddha Sanmarga Sangam, Vadalur, India


## Conflict of interest

The Author's has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author(s) 2024. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License.

## Cite this Article

M. Palani, Children's Thoughts in Aruppukottai Kasi Poems, Indian Journal of Multilingual Research and Development, Vol 5, Iss 4, (2024) 14-19. DOI: https://doi.org/10.54392/ijmrd2443